வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

பாடம் – 46

# மாபெரும் தெய்வீக அழைப்பு



The Great High Calling

Bible Research and Study Centre

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

# மாபெரும் தெய்வீக அழைப்பு

# The Great High Calling



கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதர சகோதரிகளே,

இன்று நாம் தேவன் வைத்திருக்கும் ஒரு அழைப்பைக் குறித்து தியானிக்க இருக்கிறோம். அது பரலோகத்திற்குரிய மிக மேன்மையும் அருமையுமான அழைப்பாகும். இந்த அழைப்பைக் குறித்த வசனப்பகுதியை வாசிப்போம் -

**வெளிப்படுத்தல் 18:4**

***"பின்பு, வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன் - என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்"***

இதுவே அந்த **'அழைப்பு"**. இது வானத்திலிருந்து உண்டான **'என் ஜனங்களே"** எனப்படுபவர்களுக்கு கொடுக்கப்படும் சத்தம்.

- **என் ஜனங்கள் என்று யாரை அழைக்கிறார்?**
- **"அவளைவிட்டு வெளியே வாருங்கள்" என்பது எதைக் குறிக்கிறது?**
- **"அவள்" என்பது யார்?**

நாம் இந்த கேள்விகளுக்கான விடைகளையும் இந்த அழைப்பு குறித்த விபரங்களையும் வெளிப்படுத்தின விசேஷம் 18ம் அதிகாரத்தில் காணலாம் -

**வெளிப்படுத்தல் 18:1,2**

***"இவைகளுக்குப் பின்பு வேறொரு தூதன் மிகுந்த அதிகாரமுடையவனாய் வானத்திலிருந்து இறங்கி வரக்கண்டேன். அவனுடைய மகிமையினால் பூமி பிரகாசமாயிற்று. அவன் பலத்த சத்தமிட்டு மகா பாபிலோன் விழுந்தது விழுந்தது. அது பேய்களுடைய குடியிருப்பும், சகலவித அசுத்த ஆவிகளுடைய காவல்வீடும், அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவித பறவைகளுடைய கூடுமாயிற்று"***

வானத்திலிருந்து வருகிறவரும், மிகுந்த அதிகாரம் உடையவருமான அந்த "தூதன்"- தம் இரண்டாம் வருகையில், சகல அதிகாரமும் உடையவராக வருகின்ற இயேசு ராஜாவைக் குறிக்கிறது. அவரே

வசனம் 2 மற்றும் 3ல் இந்த வார்த்தைகளைப் பேசுகிறார்.
பின்பு வசனம் 4ல் -*"பின்பு, வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக்கேட்டேன். அது - "என் ஜனங்களே.. அவளைவிட்டு வெளியே வாருங்கள்"*

⇨ **இந்த சத்தம் யாருடையது ?**

இது சர்வ வல்லமையுள்ள பரலோகப் பிதாவின் சத்தமேயாகும்.
தேவன் ஏன், "என் ஜனங்களே அவளைவிட்டு வெளியே வாருங்கள்" என்று கூறுகிறார்? என்றும் அவள் என்பது யாரைக்குறிக்கும் என்றும் பின்வரும் வசனத்தில் வாசிக்கலாம் -

**வெளிப்படுத்தல்18:1-3**

***"..வேறொரு தூதன் மிகுந்த அதிகாரமுடையவனாய் வானத்திலிருந்து இறங்கி வரக்கண்டேன், அவனுடைய மகிமையினால் பூமி பிரகாசமாயிற்று. அவன் பலத்த சத்தமிட்டு மகா பாபிலோன் விழுந்தது விழுந்தது. அது பேய்களுடைய குடியிருப்பும், சகலவித அசுத்த ஆவிகளுடைய காவல்வீடும், அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவித பறவைகளுடைய கூடமாயிற்று. அவளுடைய வேசித்தனத்தின் உக்கிரமான மதுவை எல்லா ஜாதிகளும் குடித்தார்கள். பூமியின் ராஜாக்கள் அவளோடே வேசித்தனம் பண்ணினார்கள். பூமியின் வர்த்தகர் அவளுடைய செல்வச் செருக்கின் மிகுதியினால் ஐசுவரியவான்களானார்கள் என்று விளம்பினான்"***

இங்கு "அவள்" என்பது "மகா பாபிலோன் "என்பதைக் குறிப்பதாக உணர்கிறோம்.
இந்த மகாபாபிலோன் யார் என்பதுபற்றி அந்திக்கிறிஸ்து பாகம்-3ல் விபரமாக ஆராய்ந்தோம். "அவளைக்" குறித்து பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

**வெளிப்படுத்தல் 17:5**

***"மேலும் இரகசியம், மகா பாபிலோன், வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய் என்னும் நாமம் அவள் நெற்றியில் எழுதியிருந்தது"***

இங்கு **'மகாபாபிலோன்"** என்று அழைக்கப்படுகிற ஸ்திரீயை"அடையாள பாஷையில் கூறப்பட்டுள்ளது. இந்த ஸ்திரீயைக்குறித்து பின்வரும் வசனத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது -




**வெளிப்படுத்தல் 17:1**

***"ஏழு கலசங்களையுடைய அந்த ஏழு தூதரில் ஒருவன் வந்து என்னோடே பேசி நீ வா, திரளான தண்ணீர்கள்மேல் உட்கார்ந்திருக்கிற மகா வேசியோடே பூமியின் ராஜாக்கள் வேசித்தனம் பண்ணினார்களே. அவளுடைய வேசித்தனமாகிய மதுவால் பூமியின் குடிகளும் வெறிகொண்டிருந்தார்களே"***

இந்த **'மகா பாபிலோன்"** வேசி என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
இந்த வேசி யாரைக்குறிக்கிறாள்?
இது ரோம பட்டணத்து சபையாகிய ரோமன் கத்தோலிக்க



திருச்சபையைக் குறிக்கிறது. மேலும் இது “தாய்” சபை என்ற பிரபலமான அடைமொழியில் அழைக்கப்படுகிறது.

**⇨ "திரளானதண்ணீர்கள்மேல் உட்கார்ந்திருப்பது"**

எதைக்குறிக்கிறது?

இதற்கான பதிலை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

**வெளிப்படுத்தல் 17:15**

***“பின்னும் அவன் என்னைநோக்கி, அந்த வேசி உட்கார்ந்திருக்கிற தண்ணீர்களை கண்டாயே, அவைகள் ஜனங்களும் கூட்டங்களும் ஜாதிகளும் பாஷைக்காரருமாம்”***

“தண்ணீர்கள்” என்பது உலகத்திலுள்ள பலதரப்பட்ட ஜனங்களுக்கு அடையாளமாகும்.

மேலும் ***“திரளான தண்ணீர்கள்மேல் உட்கார்ந்திருக்கிற” அந்த “வேசி”*** - ரோமன் கத்தோலிக்க திருச்சபைக்கு அடையாளமாகும். இந்த சபை உலகின் அனைத்து தேசங்களிலும் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

**⇨ இங்கு "வேசித்தனம்"என்பது எதைக்குறிக்கிறது?**

இது வெளிப்படுத்தின விசேஷத்தில் கள்ளத்தொடர்பைக் குறிப்பதற்கு பயன்படுத்தப்படும் அடையாளமாகும்.

மணவாளனாகிய இயேசுகிறிஸ்துவுடன் “நிச்சயிக்கப்பட்டவளாக” இருக்கவேண்டிய சபையின் கள்ளத் தொடர்பை குறிப்பதாக இருக்கிறது. இதைக் குறித்து பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம்

**2கொரிந்தியர் 11:2**

***“நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும்
ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால் ,
உங்களுக்காக தேவவைராக்கியமான வைராக்கியங் கொண்டிருக்கிறேன்”***

ஆனால் சபையானது பூமியின் இராஜாக்களோடு தொடர்பு வைத்துக்கொண்டது(வெளிப்படுத்தல் 18:3). அதாவது இவ்வுலகைஆளுகின்ற அரசியல் சக்திகளோடு கள்ளத்தொடர்பு ஏற்படுத்திக கொண்டது. விபசாரம் என்பது திருமணத்திற்குப் பிறகு வேறொருவரோடு வைக்கும் கள்ளத்தொடர்பு ஆகும்.

இங்கு கிறிஸ்துவோடு இணைந்து செயல்படவேண்டிய சபையானது, அதற்கு முன்பதாகவே அரசியல் சக்திகளோடு தொடர்பு அல்லது கூட்டணி ஏற்படுத்திக்கொண்டது. இந்தக் கள்ளத்தொடர்பு 799 முதல் 1799 வரை பரிசுத்த



ரோம ராஜ்யம் என்ற பெயரில் ஆளுகை செய்தது. இவையனைத்தும்ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணத்திற்கு முன்னதாக நிறைவேறியது. இவ்விதமாக ரோமன் கத்தோலிக்க திருச்சபையே அந்த வேசிகளின் தாய் என்று அடையாளம் கண்டபிறகு, வேசிகள் என்று குறிப்பிடப்படுகிற "குமாரத்திகள்" யார்? என்று அறிவது அவசியம்.

இவர்கள் ரோமன் கத்தோலிக்க திருச்சபையை விட்டு வெளியே வந்த புராட்டஸ்டன்ட் சபைகளைக் குறிக்கிறது.

இந்த சபைகள்அநேகமாயிருந்து, ஒவ்வொன்றும் தங்கள் சொந்த வழியில் அரசியல் சக்திகளோடு தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளவும், ஜனங்களை ஆளுகை செய்யவும் முனைப்பாய் இருக்கின்றன.

இவ்விதமாக "பாபிலோன்" என்ற வார்த்தை, "தாய் மற்றும் குமாரத்திகள்" இருவரையும் குறிப்பிட பயன்படுத்தும் வார்த்தையாகும்.

இந்த "அமைப்புகளுக்கெல்லாம் அமைப்பாகிய" "மகாபாபிலோன்" எவ்வாறு கிறிஸ்துவின் 2ம் வருகைக்குப் பின்பு புறக்கணிக்கப்பட்டது என்பதை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

**_வெளிப்படுத்தல் 18:1,2_**

**_"இவைகளுக்குப்பின்பு, வேறொரு தூதன் மிகுந்த அதிகாரமுடையவனாய், வானத்திலிருந்து இறங்கி வரக்கண்டேன். அவனுடைய மகிமையினால் பூமி பிரகாசமாயிற்று. அவன் பலத்த சத்தமிட்டு மகா பாபிலோன் விழுந்தது...விழுந்தது, அது பேய்களுடைய குடியிருப்பும், சகலவித அசுத்த ஆவிகளுடைய காவல்வீடும், அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவித பறவைகளுடைய கூடுமாயிற்று"_**

கர்த்தராகிய இயேசு தம் இரண்டாம் வருகையில் **'பாபிலோன்"** மீதான நியாயத்தீர்ப்பை , மகா பாபிலோன் விழுந்தது விழுந்தது என்று இரண்டு முறை கூறுவது, பாபிலோனின் இரண்டு பிரிவுகளை அல்லது பெயர்சபையின் இரண்டு பாகங்களைக் குறிக்கிறது. இந்த இரண்டையும் தம் ஆதரவிலிருந்து கர்த்தர் புறக்கணித்ததை பின்வரும் வார்த்தைகளில் காணலாம்

**_வெளிப்படுத்தல் 3:15-18_**

**_"உன் கிரியைகளைஅறிந்திருக்கிறேன், நீ குளிருமல்ல அனலுமல்ல. நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும். இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியால் உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப்போடுவேன். நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல், நான் ஐசுவரியவானென்றும்,திரவிய சம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும் சொல்லுகிறபடியால் - நான், நீ ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும் உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக்கொள்வதற்கு வெண் வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக்கொள்ளவும், நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்கு கலிக்கம் போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்"_**

கர்த்தர் தம் அங்கீகரிப்பையும் ஆதாரவையும் பெயர் சபைகளிடமிருந்து விலக்கினதை மேலே

குறிப்பிட்டிருக்கிறது.

**"உன்னை என் வாயினின்று வாந்தி பண்ணிப்போடுவேன்"** - கர்த்தரால் பெயர்சபைகள் புறக்கணிக்கப்பட்டதை அடையாளப்படுத்துகிறது.

**"வெதுவெதுப்பான"** தன்மை - அனலுமின்றி குளிருமின்றி இடைப்பட்ட நிலையில் இருக்கிற தன்மை

**"குளிருமின்றி"** - கர்த்தரை முழுவதுமாக புறக்கணியாமல், அவருடைய நாமத்தினால் கிறிஸ்தவர்கள்" என்று அழைக்கப்பட விரும்பும் நிலையைக் குறிக்கிறது

**"அனலுமின்றி"** - சத்தியத்தை ஏற்றுக்கொள்வதிலும், அதற்கு கீழ்ப்படிவதிலும் தேவைப்படுகின்ற வைராக்கியத்தில் குறைவுபட்ட நிலையைக் குறிக்கும்.

பெயர் சபைகளின் இந்த நிலையைக் குறித்து பின்வரும் தீர்க்கதரிசனத்தில் காண்கிறோம் -

**ஏசாயா 4:1**

***"அந்நாளில் ஏழுஸ்திரீகள் ஒரே புருஷனைப் பிடித்து, நாங்கள் எங்கள் சொந்த ஆகாரத்தைப் புசித்து, எங்கள் சொந்த வஸ்திரத்தை உடுப்போம். எங்கள் நிந்தை நீங்கும்படிக்கு உன் பேர்மாத்திரம் எங்கள்மேல் விளங்கட்டும் என்பார்கள்"***

ஏழு ஸ்திரீகளும் - ஒட்டுமொத்த பெயர்சபைகளைக் குறிக்கிறது.

***"நாங்கள் எங்கள் சொந்த ஆகாரத்தைப் புசித்து"***

இது மாம்சஉணவல்ல, ஆவிக்குரிய உணவைக் குறிக்கிறது(மத்தேயு4:4)



**எரேமியா 15:16**

***"உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன், உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது, சேனைகளின் கர்த்தாவே உம்முடைய நாமம் எனக்குத் தரிக்கப்பட்டிருக்கிறது"***

தேவனுடைய வார்த்தைகளே அந்த ஆவிக்குரிய உணவாகும்.

**யோவான் 17:17**

***"உம்முடைய வசனமே சத்தியம்".***

இந்த பெயர் சபைகள் , தங்களுடைய சொந்த சத்தியங்களை - வேதத்தில் காணப்படாத கள்ள போதனைகளை உறுதியாக பற்றிக் கொண்டிருப்பதை காண்கிறோம்.

***"எங்கள் சொந்த வஸ்திரத்தை உடுப்போம்"***

வஸ்திரம் என்பது பாவத்திற்கான மூடலைக் குறிக்கிறது(ஆதி3:7). மேலும் பாவத்தை மூடுகிற ஒரே உண்மையான வஸ்திரம் பின்வரும் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது -

**ஏசாயா 61:10**

***"மணவாளன் ஆபரணங்களினால் தன்னை அலங்கரித்துக்கொள்ளுகிறதற்கும் , மணவாட்டி நகைகளினால் தன்னைச் சிங்காரித்துக் கொள்ளுகிறதற்கும் ஒப்பாக, அவர் இரட்சிப்பின் வஸ்திரங்களை எனக்கு உடுத்தி, நீதியின் சால்வையை எனக்குத் தரித்தார்"***

பாவங்களை முழுமையாக மூடக்மூடியதும், ஒருவனை நீதிமானாக்குகிறதுமான வஸ்திரம்- கல்வாரியில் இயேசு தந்த ஈடுபலியின் விலைக்கிரயமே.

ஆனால் இன்றைய சபைகள் தங்கள் சொந்த வஸ்திரத்தையே உடுத்திக்கொள்வோம் என்று சொல்வதைக் காண்கிறோம். சொந்த வஸ்திரம் என்பது- பாவத்தை மூடுவதாக கருதப்படும் சமூகசேவை, அறத்தொண்டுகள் போன்றவற்றைக் குறிக்கிறது. ஆனால் இந்த கிரியைகளைக் குறித்து வசனத்தில் வாசிக்கிறோம் -

**ஏசாயா 64:6**

***"நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள்போல இருக்கிறோம். எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது. நாங்கள் அனைவரும் இலைகளைப்போல உதிருகிறோம். எங்கள் அக்கிரமங்கள் காற்றைப்போல் எங்களை அடித்துக்கொண்டு போகிறது"***

இருந்தாலும், பெயர் சபைகள் அனைத்தும்,"உன் பேர் மாத்திரம் எங்கள்மேல் விளங்கட்டும்" என்று இயேசுவின் நாமத்தை மட்டும் தேடி அவரது சத்தியங்களைத் தேடாமலிருக்கிறார்கள்

சுவிசேஷயுகத்தின் ஏழு காலகட்டங்கள் முழுவதுமாக இதுவே சபையின் நிலையாக இருக்கிறது. ஆனால் கர்த்தர் தம் இரண்டாம் வருகையில் முழு அமைப்பையும் புறக்கணித்ததில் இவை முடிவுக்கு வந்தது. புறக்கணித்த அந்த வருடத்தை பின்வரும் வசனம் மூலம் அடையாளம் காண்போம் -

**வெளிப்படுத்தல் 6:10,11**

***"அவர்கள் - பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக் குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள். அப்பொழுது அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டது. அன்றியும் அவர்கள் தங்களைப்போலக் கொலை செய்யப்படப் போகிறவர்களாகிய தங்கள் உடன் பணிவிடைக்காரரும் தங்கள் சகோதரருமானவர்களின் தொகை நிறைவாகுமளவும் இன்னுங் கொஞ்சக்காலம் இளைப்பாறவேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது"***

இவ்வசனத்திற்குள்ளாக இதற்கான பதில் காணப்படுகிறது. சுவிசேஷயுக ஐந்தாம் சபையாகிய சர்தை சபையின் காலப்பகுதியை வேத வசனங்கள் அடையாளபாஷையில் கிபி1367 முதல் 1517 என்று காண்பிக்கின்றது. அப்பொழுது உண்மை சபை அங்கத்தினர்கள் பெரிதான உபத்திரவங்களுக்கிடையே தேவனிடத்தில் தேவ நீதிக்காக கூக்குரலிட்டதாக அடையாள பாஷையில் சொல்லப்பட்டுள்ளது. அதற்கு தேவன் பதிலளிக்கையில்,

### *"..இன்னுங் கொஞ்காலம் இளைப்பாறவேண்டும் என்று அவர்களுக்கு சொல்லப்பட்டது"*

இங்கு கொஞ்சகாலம் என்ற வார்த்தை **க்ரோனோஸ்** (Chronos) என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்படுகிறது. இதற்கு காலம் என்று பொருளாகும். காலம் என்ற வார்த்தை 360 தீர்க்கதரிசன நாட்களை உள்ளடக்கிய ஒரு தீர்க்கதரிசன வருடத்தைக் குறிப்பதாக தீர்க்கதரிசன திறவுகோல்கள் என்ற பாடத்தில் படித்திருக்கிறோம்.

இவ்விதமாக 360 நாட்கள் என்பது 360 வருடங்களைக் குறிக்கிறது. தேவனுடைய சத்தியங்களின் மூலமாக மனந்திரும்புவதற்கு சீர்திருத்துதலின் காலம் ஒரு சந்தர்ப்பமாக அமைந்தது.
இது பாபிலோன் மனந்திருந்துவதற்காக கொடுத்த காலம் என பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம்

**வெளிப்படுத்தல் 2:21**

***"அவள் மனந்திரும்பும்படியாய் அவளுக்குத் தவணை கொடுத்தேன் . தன் வேசி மார்க்கத்தை விட்டு மனந்திரும்ப அவளுக்கு விருப்பமில்லை"***

இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிற பாபிலோன் பெயர் கிறிஸ்தவ அமைப்பேயாகும். இவ்விதமாக மனந்திரும்ப ஏதுவாக அநேக சந்தர்ப்பங்கள் கொடுத்தபின்பு, தேவனுடைய நியாயத்தீர்ப்பு கர்த்தராகிய இயேசு மூலம் வந்தது.

**வெளிப்படுத்தல் 18:2**

***"அவன் பலத்த சத்தமிட்டு - மகா பாபிலோன் விழுந்தது, விழுந்தது"***

பாபிலோனின் இந்த புறக்கணிப்பு - 1518முதல் துவங்கிய சீர்திருத்தலின் விளைவுகளாகிய ஒரு தீர்க்கதரிசன வருட காலப்பகுதி கழித்து நிறைவேறியது.

**கிபி 1518 + 360 = கிபி 1878**

இவ்விதமாக 1878ம் வருடம் கர்த்தர் தம் இறுதியான நியாயத்தீர்ப்பின் மூலம் பாபிலோனை புறக்கணித்தார்.

- இந்த வருட கணக்கீட்டை வேறொரு முறையின்மூலமும் நிரூபிக்கலாம்.
- இஸ்ரயேலர் புறக்கணிக்கப்பட்டது, பாபிலோன் புறக்கணிக்கப்பட்டதற்கு நிழலாக உள்ளது என்பதை 2வது நிரூபணமாகப் பார்ப்போம்

நம் கர்த்தர் தம் முதலாம் வருகையில் மேசியாவாக வந்து $^{1..2}$3 வருடங்களுக்குப்பின்பு, தம் மரணம் சம்பவிப்பதற்கு சில நாட்கள் முன்பு இஸ்ரயேல் தேசத்தின் மீதான நியாயத்தீர்ப்பை உரைத்தார். அதுபோல கர்த்தர் தம் இரண்டாம் வருகையில் ஆவிக்குரிய இஸ்ரயேலராகிய பெயர் சபையை அல்லது பாபிலோனை தம் இரண்டாம் வருகையின் வருடமாகிய 1874ம் வருடம் அக்டோபர் மாதத்திற்குபின்பு மிக சரியாக 31/2 வருடங்கள் கழித்து புறக்கணித்தார்.

| | | | | |
|---|---|---|---|---|
| **அக்டோபர் 1874** | + | **3 1/2** | = | **ஏப்ரல் 1878** |
| (2ம் வருகையின் வருடம்) | | (வருடங்கள்) | | |

இது பாபிலோன் புறக்கணிக்கப்பட்ட வருடத்தை நிரூபிப்பதற்கான சரியான ஆதாரமாகும். இங்கு

வேறொரு முக்கியமான ஒன்றையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

அதாவது இஸ்ரயேலருக்கு கர்த்தர் கொடுத்த நியாயத்தீர்ப்பின் வருடம் கிபி 33. ஆனால் இந்த நியாயத்தீர்ப்பு முழுமையாக நிறைவேறித்தீர்ந்தது கிபி 69-70இல் ஆகும். ஆகவே நியாயத்தீர்ப்பு கொடுக்கப்பட்டு ஒரு காலகட்டம் சென்றபிறகுதான் முழுமையானஅழிவு சம்பவித்தது. அதுபோலவே பாபிலோனின் இறுதி அழிவிலும் சம்பவிக்கும். அதன் இறுதி அழிவைக் குறித்து வாசிக்கையில் ,

**வெளிப்படுத்தல் 18:21**

***"அப்பொழுது, பலமுள்ள தூதனொருவன் பெரிய எந்திரக்கல்லையொத்த ஒரு கல்லை எடுத்துச் சமுத்திரத்திலே எறிந்து - இப்படியே பாபிலோன் மகா நகரம் வேகமாய் தள்ளுண்டு இனி ஒருபோதும் காணப்படாமற்போகும்"***

இங்கு எந்திரக்கல் - ரோமன் கத்தோலிக்கம் மற்றும் புராட்டஸ்டன்ட் அமைப்புகளைகுறிக்கும். இவை இரண்டும் முழுவதுமாக இறுதியில் அழிக்கப்படும். ஆனால் அந்த அழிவு சம்பவிக்குமுன் தேவன் ஒரு அழைப்பை விடுக்கிறார். இது குறித்து வாசிப்போம் -

**எரேமியா 51:9,6**

***" பாபிலோனைக் குணமாக்கும்படி பார்த்தோம் அது குணமாகவில்லை. அதை விட்டுவிடுங்கள். நாம் அவரவர் நம்முடைய தேசங்களுக்குப் போகக்கடவோம்"***

***"நீங்கள் பாபிலோனின் அக்கிரமத்தில் சங்காரமாகாதபடிக்கு அதின் நடுவிலிருந்து ஓடி அவரவர் தங்கள் ஆத்துமாவைத் தப்புவியுங்கள்"***

இது பாபிலோனைவிட்டு வெளியேற தேவன் விடுக்கிற அழைப்பாகும். இறுதியாக தேவன் தனிப்பட்ட முறையில் விடுத்த அழைப்பை புதியஏற்பாட்டில் வாசிக்கையில் -

**வெளிப்படுத்தல் 18:4**

***"பின்பு வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக்கேட்டேன். அது.. என்ஜனங்களே நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்"***

என் ஜனங்களே என்பது யாரைக் குறிக்கிறது? பெயர்சபைகளாகிய பாபிலோன் மத்தியிலிருந்து கர்த்தரையும், சத்திய வார்த்தைகளையும் உண்மையான இருதயத்தோடு தேடுகிற விசுவாசமுள்ள வெகுசிலர் ஆவர். மேலும் இந்த அழைப்பு 1878 ம் வருடம் முதல் சென்றுகொண்டிருக்கிறது.

இங்கு தேவனால் "என் ஜனங்களே" என்றழைக்கப்படுகிற வகுப்பாரில் நீங்களும் ஒருவரா? தேவன் இன்று உங்களிடம் பேசுகிறாரா? அப்படியென்றால், தேவனிடமிருந்து வருகிற இந்த அழைப்பை உங்கள் காதுகள் கேட்கும். ஏனென்றால் .. இந்த அழைப்பு தனிப்பட்ட வகையில் உங்களுக்கு விடுக்கப்பட்டதாகும்.

இப்பொழுது நீங்கள் கர்த்தருடைய தீர்க்கதரிசன வார்த்தைகளில் நாம் வாசிக்கிறதுபோல துரிதமாக செயல்படவேண்டும் -

**மத்தேயு 24:15**

***"மேலும், பாழாக்குகிற அருவருப்பைக் குறித்து தானியேல் தீர்க்கதரிசி***

*சொல்லியிருக்கிறானே, வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன்.*
*நீங்கள் அதைப் பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக் காணும்போது,*
*யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள்"*

இங்கு ✹ நீங்கள ˙ என்பது தேவனுடைய சத்தியங்களைக் கேட்டுவருகிற உங்களைக் குறிக்கிறது.

✹ நீங்கள் பாழாக்கும் அருவருப்பு பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கிறதை மனக்கண்களால் காண்கிறீர்களா? அந்திகிறிஸ்து அமைப்புகளாகிய பாபிலோன்- தேவனுடைய உண்மையான சபையாக நின்றுகொண்டிருப்பதைக் காண்கிறீர்களல்லவா?

**மத்தேயு 24:16**

*"ஏனெனில், கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி,*
*கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப்*
*பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்"*

இதை அறிந்து உணர்ந்தவர்களாகிய நாம் செய்யவேண்டியதுஎன்ன? வாசிப்போம் -

✹ **யூதேயாவில் இருக்கிறவர்கள்** - யூதேயா என்பது ஒரு மலைப்பிரதேசம். இங்கு சொல்லர்த்தமான அர்த்தமல்ல. ஒரு மலையிலிருந்து இன்னொரு மலைக்கு ஓடிப்போவதில் என்ன விசேஷம் இருக்கப்போகிறது? எனவே இங்கு யூதேயா என்பது பெயர்கிறிஸ்தவ அமைப்பாகிய பாபிலோனைக் குறிக்கிறது.

✹ **மலைகளுக்கு ஓடிப்போ** - இது மலை என்று ஒருமையிலே சொல்லப்படவேண்டும். வேதத்தில் 'மலை" என்பது இராஜ்யத்தைக் குறித்த அடையாளமாகும். இதற்கான பதிலை வாசிப்போம் -

**கொலோசெயர் 1:13**

*"இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய*
*ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம்"*

நாம் ஓடவேண்டிய மலை கிறிஸ்துவின் ராஜ்யமே. நாம் "ஆவியிலும்" "சத்தியத்திலும்" நிலைத்திருக்கிற கிறிஸ்தவமாகும்.

கர்த்தருடைய ஆலோசனையானது ---- கள்ள உபதேசங்கள், பொய் மற்றும் தவறான போதனைகளை கொண்டுள்ள இந்த அமைப்புக்களிடமிருந்து ஓடவேண்டும் என்பதேயாகும்.

மேலும் கர்த்தர் சில முக்கியமான எச்சரிப்புகளை தீர்க்கதரிசனமாக கூறுகிறதை ஒவ்வொன்றாக பார்ப்போம் -

**எச்சரிப்பு - 1**

**மத்தேயு 24:17**

*"வீட்டின்மேல் இருக்கிறவன் தன் வீட்டிலே*
*எதையாகிலும் எடுப்பதற்கு இறங்காதிருக்கக்கடவன்"*



வீடு - இது பெயர் கிறிஸ்தவ மண்டலத்தில் காணப்படுகிற பலவகையான "விசுவாச வீடுகளாகிய" தனிப்பட்ட சபைகளையும், பிரிவுகளையும் குறிக்கும். இந்த சபைகளின் அங்கத்தினர்களுக்கு சொல்லப்படுவதாகும்.

"வீட்டின்மேல் இருக்கிறவன் தன் வீட்டிலே எதையாகிலும் எடுப்பதற்கு" - இது விசுவாசத்தில் கர்த்தரோடு வாழ்கிற வாழ்க்கையில், அவரவர் இருக்கிற நிலைமை

"இறங்காதிருக்கக்கடவன்" - விசுவாசத்தில் கீழானநிலைக்கு "இறங்கி" வருவதைக் குறிக்கிறது. தங்களைக்காட்டிலும் விசுவாசத்திலும், புரிந்துகொள்ளுதலிலும் கீழான நிலையிலிருக்கும் தன் சபை பிரிவைச் சார்ந்த மற்றவர்களிடம் சத்திய போதனைகளை ஆராய்ந்து அறிய அவர்களிடத்தில் சென்று எடுக்கப்படும் முயற்சிகளை குறிக்கிறது. ஒருவேளை இவர்கள் போதகர்களாகவோ அல்லது உடன் அங்கத்தினர்களாகவோ இருக்கலாம்.

"தன் வீட்டிலே எதையாகிலும் எடுப்பதற்கு" கீழே வருகிறார்கள் - மற்றவர்கள் சத்தியத்தை அங்கீகரிப்பார்களா என்று நாடிச்செல்லும் முயற்சிகளைக் குறிக்கிறது. ஆனால் அவர்களது மனக்கண்கள் திறக்கப்படாததால் வாக்குவாதத்துக்கு வழிநடத்துகிறது. அநேகர் இவ்வாறு முயற்சித்தாலும், இந்த முயற்சிகள் வீணானது என்று கர்த்தர் அறிந்திருக்கிறார்.

இயேசுவினுடைய நாட்களிலும் யூத போதகர்கள் அல்லது பரிசேயர்கள் அல்லது ஜனத்தின் மூப்பர் ஆகிய இவர்களில் ஒருவரும் கர்த்தரின் வார்த்தைகளை நம்பவில்லை என்று பார்க்கிறோம்

**யோவான் 7:48**

***"அதிகாரிகளிலாவது பரிசேயரிலாவது யாதாமொருவர் அவனை விசுவாசித்ததுண்டா?***

இன்றைய சபை போதகர்களிடத்திலும் இந்த நிலை காணப்படுகிறது உண்மையல்லவா? சத்தியமானது எப்பொழுதும் எதிர்க்கப்படும் என்பதை ஆதிகால சபையின் நிலைமையிலிருந்து உணரலாம் -

**அப்போஸ்தலர் 28:22**

***"எங்கும் இந்த மதபேதத்துக்கு விரோதமாய்ப் பேசுகிறதாக நாங்கள் அறிந்திருக்கிறபடியால், இதைக் குறித்து உன்னுடைய அபிப்பிராயம் என்னவென்று கேட்டறிய விரும்புகிறோம் என்றார்கள்"***

இப்படிப்பட்ட கிரியைகள் இந்நாள்வரை மாறாமலிருப்பதைக் காண்கிறோம்.

## எச்சரிப்பு - 2

**மத்தேயு24:18**

***" வயலில் இருக்கிறவன் தன் வஸ்திரங்களை எடுப்பதற்காக திரும்பாதிருக்கக்கடவன்"***

***வயலில் இருக்கிறவன் திரும்பாதிருக்கக்கடவன்***" - தேவனது சத்தியங்களை கேட்டறிந்த வகுப்பாரின் செயல்களைக்குறிக்கிறது.

**இவர்கள் செய்வது என்ன?**

"***தன் வஸ்திரங்களைஎடுப்பதற்கு..***" - வஸ்திரம் என்பது மூடலைக் குறிக்கிற அடையாளம். மூடல் என்பதுபாரம்பரிய பெயர்சபைகளில் அங்கத்தினர் ஆவதன்மூலம் ஒரு கிறிஸ்தவனாக மனிதர்களுடைய அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதைக் குறிக்கிறது. இவ்விதமான மூடலை தேடுவதற்கு எதிராக கர்த்தர் எச்சரிக்கிறார். இதற்கு பதிலாக ஒருவர் சத்தியத்தில் வளர்ந்து முன்னேற்றம்காணவேண்டும் என்று கூறுகிறார்.

## எச்சரிப்பு - 3

**மத்தேயு 24:19**

"***அந்நாட்களிலே கர்ப்பவதிகளுக்கும் பால்கொடுக்கிறவர்களுக்கும் ஐயோ..***"

"***கர்ப்பவதிகள்***" - இங்கு ஆவிக்குரிய குழந்தைகளை கர்ப்பந்தரித்திருப்பவர்களை அல்லது ஆவிக்குரிய பிறப்பை இது குறிக்கிறது.

"***பால்கொடுக்கிறவர்கள்***" - ஆவிக்குரிய ஞானப் பாலாகிய சத்தியங்களைத் தருகிற போதகர்கள், பிரசங்கிமார்களைக் குறிக்கும்(1பேது2:2). இவர்களுக்கு ஐயோ என்று கூறுவதை கவனிக்கவும். இதற்குக் காரணம் என்னவெனில், இந்த குழந்தைகள் உண்மையான "பாலாகிய" சத்தியத்தினால் போஷிக்கப்படாமல் இருப்பதேயாகும். இவ்வாறு இந்த போதகர்கள் சத்தியங்களை கேட்டறிந்த பின்பு, தங்களுடைய குழந்தைகளிடத்தில் கள்ளபோதனைகள் அசத்தியம் போன்ற தவறான பாலினால் போஷிக்கப்பட்டிருப்பதை ஒப்புக்கொள்ளவேண்டும்.

இதன்மூலம் தங்களுடைய மந்தையை பாதிப்புக்குள்ளாக்கி, மந்தையை இழந்துவிட நேரிடவும்கூடும்.

இவர்கள் தங்கள் வருமானத்திற்கு சபை அங்கங்களின் காணிக்கையை எதிர்பார்த்திருப்பதால், வருமானம் பாதிப்புக்குள்ளாகும் வாய்ப்பும் உள்ளது.
ஆகையால் இது இவர்களுக்கு கடினமான காரியம். ஆனாலும் முடியாதது அல்ல.

இந்த மூன்று எச்சரிப்புகளும், அறுவடைக்காலத்தில் உள்ள மூன்று வகுப்பாருக்கு விடப்படுவதை வாசிக்கிறோம் -

**லூக்கா 17:34-36**

"***அந்த இராத்திரியில் ஒரே படுக்கையில் படுத்திருக்கிற இரண்டு பேரில் ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான், மற்றவன் கைவிடப்படுவான். திரிகை திரிக்கிற இரண்டு ஸ்திரீகளில் ஒருத்தி ஏற்றுக்கொள்ளப்படுவாள், மற்றவள் கைவிடப்படுவாள். வயலிலிருக்கிற இரண்டுபேரில் ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான், மற்றவன் கைவிடப்படுவான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்***"

இந்த மூன்று வகுப்பார் -

“படுக்கையிலிருந்த வகுப்பார்” - பல்வேறு கிறிஸ்தவ சபை பிரிவுகளிலுள்ள அங்கத்தினர்கள்

“திரிகை திரிக்கிற” வகுப்பார்“ - ஆவிக்குரிய ஆகாரத்தை ஆயத்தம்பண்ணி பரிமாறுகிற போதகர்கள், பிரசங்கிமார்கள், பாதிரியார்கள் ஆவர்.

“வயலில் இருக்கிற” வகுப்பார்” - கிறிஸ்தவர்கள் அல்லாத உலகத்தில் உள்ள மற்ற ஜனங்கள் இந்துக்கள், இஸ்லாமியர், புத்த மதத்தினர் மற்றும் கடவுள் நம்பிக்கையற்ற அனைவரும் அடங்குவர்

இந்த மூன்று எச்சரிப்புக்களை அடுத்து நான்காவது எச்சரிப்பை கர்த்தர் விடுப்பதை நாம் காணலாம்.

## எச்சரிப்பு - 4

**மத்தேயு 24:20**

***“நீங்கள் ஓடிப்போவது மாரிகாலத்திலாவது, ஓய்வுநாளிலாவது சம்பவியாதபடிக்கு வேண்டிக்கொள்ளுங்கள்”***

இவ்வசனத்திலுள்ள அடையாளங்களின் பொருள்களை காண்போம் -
“மாரிகாலம்” - மாரிகாலம் என்பது கோடைகாலத்தைத் தொடர்ந்து வரும். கோடைகாலம் என்பது அறுவடையின் காலமாகும்.

**நீதிமொழிகள் 10:5**

***“கோடை காலத்தில் சேர்க்கிறவன் புத்தியுள்ள மகன். அறுப்புக்காலத்தில் தூங்குகிறவனோ இலச்சையை உண்டாக்குகிற மகன்”***

அறுவடைக்காலம் நிறைவடைந்தபின்பு வரும் காலமே “மாரிக்காலம்”. இங்கு கர்த்தருடைய எச்சரிப்பு என்னவெனில், இவர்கள் பாபிலோனை விட்டு வெளியேறுவது அறுவடை முடிவடைந்த பின்பு இருக்கக்கூடாது என்பதற்காக “ஜெபியுங்கள்” என்பதே. ஏனெனில் அவ்வாறு செய்வது கொடிய நிலையில் சிக்கியதாக இருக்கும் என்று வசனத்தில் வாசிக்கிறோம் -

**எரேமியா 8:20**

***“அறுப்புக்காலம் சென்றது, கோடைக்காலமும் முடிந்தது, நாமோ இரட்சிக்கப்படவில்லை”***

இவ்விதமான நிலையில் ஒரு வகுப்பார் இருப்பர். இவர்கள் பாபிலோனைவிட்டு வெளியே வர தயங்கி.. மிகவும் தாமதிப்பதால், கிறிஸ்துவின் சரீரமாகும் வாய்ப்பை தவறவிட்டு, ‘புத்தியில்லாத கன்னிகளாக” ஆவார்கள்.

***“ஓய்வுநாளிலாவது”*** - ஏழாவது ஆயிரமாண்டாகிய, கிறிஸ்துவின் 1000 ஆண்டு அரசாட்சியைக் குறிக்கிறது.

இது 1874ம் வருடம் அக்டோபர் மாதம் துவங்கிய ஆயிரமாண்டின் காலப்பகுதியாகும். மேலும் இது நியாயத்தீர்ப்பின் நாளாகவும் இருந்து, பாபிலோன் மீது வரப்போகிற உபத்திரவம் மற்றும் நியாயத்தீர்ப்பை நோக்கி கடந்து வருவதால், ஒவ்வொரு வருடமும் இன்னும் அதிக உபத்திரவங்களுக்கு வழிநடத்தும். இதனால் பாபிலோனைவிட்டு வெளியேறுவது கடினமானதாய் இருக்கும்.

மேலும் நாம் உணரவேண்டியது என்னவெனில், இந்த "ஓய்வுநாள்" 1874ம் வருடம் துவங்கினபின்பு, கோடைக்காலமாகிய "அறுவடை" துவங்கி, பின்பு "மாரிக்காலம்" இருக்கும். இந்தக் காலத்தில் பாபிலோனைவிட்டு வெளியேறத் தயங்கி தாமதப்படுத்துபவர்கள், உபத்திரவங்களுக்குள் சிக்கிக்கொள்ளாதிருக்கவே "ஜெபிக்கும்படி" எச்சரிக்கிறார்.

"தம்முடைய ஜனங்கள்" பாபிலோனைவிட்டு வெளியேறும்பொழுது அவர்களுக்கு சம்பவிக்கப்போகிற பல வகையான சந்தர்ப்ப சூழ்நிலைகளை கர்த்தர் முன்னறிந்திருப்பதைக் காண்கிறோம்.

இறுதியாக பாபிலோனைவிட்டு "வெளியேறுதலைக்" குறித்து யாத்திராகம புத்தகத்தில் பதிவாகியுள்ள நிழலையும், அது படிப்பிக்கும் படிப்பினையையும் காண்போம்.

**யாத்திராகமம் 8:25**

***"அப்பொழுது பார்வோன் மோசேயையும் ஆரோனையும் அழைப்பித்து - நீங்கள் போய் உங்கள் தேவனுக்கு இந்த தேசத்திலேதானே பலியிடுங்கள் என்றான்"***

தங்கள் தேவனுக்கு பலிசெலுத்த வனாந்திரத்திற்குப் பயணம் செல்ல, எகிப்து ராஜாவாகிய பார்வோனிடத்தில் அனுமதிபெற மோசேயும் ஆரோனும் சென்றதைக் குறித்து வாசிக்கிறோம் -

**யாத்திராகமம் 8:27**

***"நாங்கள் வனாந்திரத்தில் மூன்று நாள் பிரயாணம்போய், எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களுக்கு விதிக்கிறபடியே அவருக்குப் பலியிடுவோம் என்றான்"***

இங்கு அருமையான நிழல் சித்தரிக்கப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். இது இன்றைய கிறிஸ்தவர்கள் தேவனிடத்தில் ஏறெடுக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிற சுவிசேஷயுக பலியின் உடன்படிக்கையை சித்தரிக்கிறது(சங்கீதம் 50:5). இந்த பலியைக் குறித்து வாசிக்கிறோம் -

**ரோமர் 12:1**

***"அப்படியிருக்க சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்கிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை"***

இப்பொழுது நிழலான மற்ற அடையாளங்களைக் காண்போம் -



"***பார்வோன்***" - எகிப்தின் ராஜா, இங்கு எகிப்துதேசம் இஸ்ரயேல் ஜனங்களுக்கு அடிமைத்தனத்திற்கு உட்பட்டிருந்த தேசமாக இருப்பதன்மூலம், இந்த இடத்தில் பார்வோன் ராஜா அடிமைத்தனத்தின் இராஜாவாக கருதப்படுகிறார்.

மேலும் எகிப்து பாபிலோனுக்கு நிழலாக இருக்கிறது. எனவே பார்வோன் இங்கு

பாபிலோனை கட்டுப்படுத்தி ஆளுகை செய்கிற சாத்தானுக்கு அடையாளம்.

“***மோசே மற்றும் ஆரோன்***” - கிறிஸ்தவர்கள் மத்தியில் பலியிடுவதற்கு முன்வருகிறவர்களை அடையாளப்படுத்துகிறார்கள். இவர்கள் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்ற முடிவெடுத்த “தெரிந்துகொள்ளப்பட்ட வகுப்பார்” ஆவர்.

இங்கு மோசேயும் ஆரோனும் - தெரிந்துகொள்ளப்பட்ட வகுப்பாருக்கிடையில் காணப்படும் இரண்டு பிரிவினரைக் குறிக்கிறார்கள். அந்த இரண்டு சகோதரர்களில், இளையவனாகிய

⇨ மோசே சிறிய வகுப்பாராகிய “சிறுமந்தையைக்” குறிக்கிறார்.

⇨ மூத்தவராகிய ஆரோன் பெரிய வகுப்பாராகிய ”திரள் கூட்டத்தைக்“ குறிக்கிறார்.

⇨ இவர்கள் இருவரும் மாம்சத்திலிருக்கிற “கிறிஸ்துவின் சரீரத்தைக்” குறிக்கிறார்கள்.

இங்கு பார்வோன் மோசே மற்றும் ஆரோனிடத்தில் உரையாடினதை கவனிக்கும்போது, இந்த “தெரிந்துகொள்ளப்பட்ட வகுப்பார்” பாபிலோனைவிட்டு வெளியேறி, பலியின் ஜீவியத்தில் பிரவேசிக்க அவர்கள் எடுத்த முடிவை மாற்ற, சாத்தான் அவர்கள் முன்பாக நான்கு சமரச முயற்சிகளை வைக்கிறதை காண்கிறோம் -

இவற்றை ஒவ்வொன்றாக காண்போம் -

### சமரச முயற்சி - 1

**யாத்திராகமம் 8:25**

***“அப்பொழுது பார்வோன் மோசேயையும் ஆரோனையும் அழைப்பித்து .. நீங்கள்போய் உங்கள் தேவனுக்கு இந்த தேசத்திலேதானே பலியிடுங்கள் என்றான்”***

இங்கு “தேசத்திலே” என்பது - எகிப்துக்கு உள்ளாக அல்லது ஆவிக்குரிய வகையில் பாபிலோனின் சபை பிரிவுகளுக்கு உள்ளாக என்பதை அடையாளப்படுத்துகிறது.

இங்கு சாத்தான் முன்வைக்கிற ‘சோதனை” மற்றும் அவன் தரும் ஆலோசனை என்னவெனில், பாபிலோன் சபைகளுக்குள்ளாகவே இருந்து.. அதைவிட்டு வெளியேறாமல் கிறிஸ்துவுக்காகவும், அவரது சத்தியத்திற்காகவும் ஒப்புக்கொடுத்த வாழ்க்கை வாழலாமே என்பதே.

பார்த்தீர்களா, .. சத்தியத்தைக் கேட்ட பின்பும் அநேகர் இந்த சோதனைக்குள் விழுகிறார்கள். ஆனால் சத்தியங்களைக் கேட்டபின்பு, பாபிலோனை விட்டு வெளியேறாமல், தொடர்ந்து இந்த சபைகளில் நிலைத்திருப்பதன்மூலம் உண்டாகும் ஆவிக்குரிய அசௌகரியத்தையும், மனதளவில் வேதனையையும் இவர்கள் வெகு சீக்கிரத்தில் உணர்வார்கள்.

இந்த சமயத்தில் சாத்தான் இரண்டாவது சமரச முயற்சியை மேற்கொள்வதை வாசிக்கிறோம் -

### சமரச முயற்சி - 2

**யாத்திராகமம் 8:28**

***“அப்பொழுது பார்வோன் - நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு வனாந்தரத்தில்***

***பலியிடும்படிக்கு, நான் உங்களைப் போகவிடுவேன். ஆனாலும் நீங்கள் அதிகதூரமாய்ப் போகவேண்டாம், எனக்காக வேண்டுதல் செய்யுங்கள் என்றான்"***

பாபிலோனைவிட்டு வெளியேற முடிவெடுத்தபின்பு, சாத்தான் இரண்டாவது சமரச முயற்சியை முன்வைக்கிறான் -

***"நீங்கள் ..பலியிடும்படிக்கு நான் உங்களைப் போக விடுவேன், ஆனாலும் அதிக தூரமாய்ப் போகவேண்டாம்"*** - தாங்கள் பாபிலோனில் இருந்த சபையை விட்டு வெளியேற முடிவெடுத்தபோதிலும், அவர்களுக்கு சாத்தான் முன்வைக்கும் யோசனை - முழுவதுமாக தொடர்பை விட்டுவிடாதீர்கள் என்பதேயாகும். "எப்படியாவது சகோதர ஐக்கியத்தை தொடருங்கள்" என்பதே இவர்களுக்கு விடப்படும் அழைப்பு.

அது ஒரு வேளை - மாதத்திற்கு ஒரு முறை, அல்லது இரண்டு வாரத்திற்கு ஒரு முறை வாருங்கள் என்பதாகும்.

இவ்வித ஆலோசனைகள் சம்பந்தப்பட்ட சபையின் போதகர்கள் அல்லது அங்கத்தினர்கள் மூலம் முன்வைக்கப்படும். பெரும்பாலும் அது உணர்ச்சிப்பூர்மான முறையில் முன்வைக்கப்படும்- உதாரணமாக,

⇨ இயேசுவைப்பற்றியும் , வேதத்தைப்பற்றியும் நாங்கள் அல்லவா உங்களுக்கு போதித்தோம்,

அல்லது ⇨ உங்களை கிறிஸ்தவ வாழ்க்கைக்கு நாங்கள் தானே முதல் முதலில் வழிநடத்தினோம்

அல்லது ⇨ இவ்வளவு வருடங்களாக உங்களை கிறிஸ்தவர்களாக வழிநடத்தின எங்களுக்கு துரோகம் செய்வீர்களா? அல்லது எங்களை விட்டுப் போகிறீர்களா? என்பதே.

ஆம். இந்த வார்த்தைகள் அனைத்தும் பாபிலோனைவிட்டு முழுவதுமாக பிரிக்கப்பட்டு, வெளியேறுவதில் தயக்கத்தை ஏற்படுத்துகிறது. இம்மாதிரியான ஆலோசனைகளுக்கு செவிசாய்த்தாலும் வெகு சீக்கிரத்தில் வேதனையையே உண்டாக்கும்.

"சத்தியத்தில் கிடைக்கிற சகோதர ஐக்கியம்" என்பது "அசத்தியத்தில் கிடைக்கிற சகோதர ஐக்கியத்திலிருந்து" முற்றிலும் வேறுபட்டது.

..பாபிலோனை விட்டு முழுவதுமாக வெளியேறுவேன் என்ற தெளிவு பிறக்கிற இந்த சமயத்தில் சாத்தான் மூன்றாவது சமரச முயற்சியை கொண்டுவருவான்-

## சமரச முயற்சி - 3

**யாத்திராகமம் 10:11**

***"அப்படி வேண்டாம், புருஷராகிய நீங்கள் போய் கர்த்தருக்கு ஆராதனை செய்யுங்கள், இது தானே நீங்கள் விரும்பிக் கேட்டது என்று சொன்னான். அவர்கள் பார்வோன் சமுகத்தினின்று துரத்திவிடப்பட்டார்கள்"***

இது பாபிலோனைவிட்டு முழுமையாக பிரிந்து வெளியேற முடிவெடுத்தபின் வைக்கப்படுகின்ற சோதனை மற்றும் சமரச முயற்சியாகும்.

இங்கு புருஷராகிய நீங்கள் என்பது எதைக் குறிக்கிறது?

ஆவிக்குரிய ரீதியில் பார்க்கும்பொழுது ஞானத்தில் பூரண வளர்ச்சி அடைந்தவர்களைக் குறிக்கிறது.

**எபேசியர் 4:11**

***"நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல்"***

இது பாபிலோனை விட்டு வெளியே வந்தபிறகு குடும்பத்திற்குள் பிரிவினை ஏற்படுத்த சாத்தான் கையாளுகிற தந்திரமாகும். குடும்பத்தில் "புருஷர்களாக" இல்லாதவர்களின் ஆவிக்குரிய வளர்ச்சியை உதாசீனப்படுத்த தூண்டுகிறான். இந்த உதாசீனம் பல ரூபங்களில் வெளிப்படலாம். உதாரணமாக - ..

- குழந்தைகளை பாபிலோனின் சபைகளில் நடைபெறுகிற ஞாயிறு பள்ளிகளில் பங்குபெற அனுமதிப்பது,
- பாபிலோனின் பள்ளி மற்றும் கல்லூரிகளில் படிக்கிற குழந்தைகளை பாபிலோனின் சடங்காச்சார வகுப்புகளில் பங்குபெற அனுமதிப்பது
- ஒரே வீட்டில் வாழ்கிற குடும்ப அங்கத்தினர்களிடம் - கணவன் மனைவி, பிள்ளைகள் .. சத்தியத்தை பகிர்ந்துகொள்ள அனுமதியாதிருப்பது

இவ்விதமாக குடும்ப அங்கத்தினர்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சியில் காட்டப்படுகிற உதாசீனம், குடும்பத்திற்குள்கருத்துவேறுபாடுகளையும் எதிர்ப்புக்களையும் உருவாக்கி, அந்த குடும்பத்தில் பாபிலோன் சபைகளின் ஆதிக்கத்தை நீடிக்கச் செய்ய வழிவகுக்கிறது.

இதற்கு மாறாக, தன் குடும்ப அங்கத்தினர் அனைவரையும் பாபிலோனை விட்டு வெளியே அழைத்துச்செல்ல தீர்மானிப்பவருக்கு முன்பாக சாத்தான் நான்காவது சமரச முயற்சியை முன்வைக்கிறான்.

## சமரச முயற்சி - 4

**யாத்திராகமம் 10:24**

***"அப்பொழுது பார்வோன் மோசேயை அழைப்பித்து - நீங்கள் போய்க் கர்த்தருக்கு ஆராதனை செய்யுங்கள், உங்கள் ஆடுகளும் உங்கள் மாடுகளும் மாத்திரம் நிறுத்தப்படவேண்டும், உங்கள் குழந்தைகள் உங்களுடன் போகலாம் என்றான்"***

இது ஒருவர் பாபிலோன் சபைகளைவிட்டு ஒட்டு மொத்த குடும்பத்துடன் வெளியேற தீர்மானித்தபிறகு அவருக்கு முன்பாக சாத்தான் வைக்கிற நான்காவதும், இறுதியுமான சமரச முயற்சியாகும்.

இங்கு "***உங்கள் ஆடுகளும்.. மாடுகளும்***" - ஜீவனத்திற்கு ஏதுவான வியாபாரங்களை குறிக்கிறது பாபிலோனின் கல்வி ஸ்தாபனங்கள் மற்றும் மருத்துவமனைகளில் வேலைசெய்கிறவர்கள்.. அதே சமயம், இந்த பாபிலோன் ஸ்தாபனங்களோடு வியாபார ரீதியில் தொடர்பு வைத்துள்ள யாவரும் , சத்தியத்திற்காக அவர்கள் செய்யும் முயற்சிகளிலிருந்து பின்வாங்குவதற்கான நிர்ப்பந்தங்களுக்குள் தள்ளப்படுவார்கள்.

இவ்விதமாக, பாபிலோனை பொருளாதார ரீதியில் சார்ந்திருப்பது சத்தியத்திற்கு பதிலாக சமரசம் செய்வதற்கு வழிவகுக்கும்.

பாபிலோனின் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் வேலைசெய்யும் ஆசிரியர்கள் பாபிலோன் சபைகளைவிட்டு வெளியேறும் பட்சத்தில் வேலையிலிருந்து நீக்கப்படுவார்கள் என்று பயமுறுத்தப்படலாம்.

ஆம். பாபிலோனை விட்டுவெளியேற எடுக்கப்படுகிற இந்த முடிவில் உறுதியான விசுவாசமும்.. கர்த்தரிடத்தில் நம்பிக்கையும் தேவைப்படுகிறது.

மேலும் அவரிடத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் அவருடைய வாக்குத்தத்தத்தை நினைவுகூறவேண்டும்

**எபிரேயர் 13:5**

***"நீங்கள் பணஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள், நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே"***

சர்வ வல்லமையுள்ள தேவனிடமிருந்து பெறப்படுகிற வாக்குறுதியாகும். அவர் உங்களைப் பாதுகாப்பதாக சொல்கிறார்.

எனவே அன்பான சகோதர சகோதரிகளே, பரலோகத்தின் தேவனிடமிருந்து இன்று வருகிற அழைப்பைக் குறித்து நாம் வாசிக்கையில் -

**வெளிப்படுத்தல் 18:4**

***"பின்பு, வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக்கேட்டேன். அது என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்"***

ஆம். இவ்விதமாக பாபிலோனைவிட்டு வெளியே வருவது முழுமையாக இருக்கவேண்டும். இறுதியாக நம் இரட்சகரின் வார்த்தையை கவனிப்போம் -

**யோவான்10:4**

***"அவன் தன்னுடைய ஆடுகளை வெளியேவிட்டபின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்துபோகிறான். ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின்செல்லுகிறது"***

⇨ கர்த்தருடைய ஆடுகளில் நீங்களும் ஒருவரா?

⇨ இன்று அவரது சத்தத்தை உங்களால் கேட்க முடிகிறதா?

⇨ பரலோகத்திலிருந்து வருகிற இந்த அழைப்பு உங்களுக்கானதா?

பரலோகத்திலிருந்து வருகிற அவருடைய சத்தத்தைக் கேட்டு அதற்குக் கீழ்ப்படிய கர்த்தர் தாமே உங்களுக்கு உதவிசெய்வாராக ஆமென்.

**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**
For Further Details Please Contact:
bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky
+919443321874 https://www.facebook.com/biblereserch/